**யாழ் இந்திய துணைத் தூதரகம்**
**யாழ்ப்பாணம்**
**ஊடக அறிக்கை**

யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தினால் கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராய நாள் 2019 இன்று (09.ஏப்ரல் 2019) Northgate Jetwing hotel லில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

2. நிகழ்வுகள் மாலை 6.30 மணிக்கு Northgate Jetwing hotel ல் ஆரம்பிக்கப்பட்டதுடன் வடமாகாண ஆளுனர் முனைவர் சுரேஸ் இராகவன், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், பிரதம செயலாளர் பத்திநாதன், ஆளுனரின் செயலாளர் இளங்கோவன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாதன், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சுக்களின் பிரதி செயலாளர்கள், யாழ் மாநகரசபை ஆணையாளர் ஆர்.ரீ.ஜெயசீலன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரன், பேராசிரியர் மிகுந்தன், பேராசிரியர் வேல்நம்பி, வடமாகாணசபையின் முன்னாள் எதிர்கட்சி தலைவர் திரு தவராஜா, யாழ்ப்பாண தமிழ் சங்க தலைவர் லலீசன், மூத்த அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசிலைப் பெற்று இந்தியாவுக்கு சென்று கல்வி கற்றவர்கள் என 80ற்கும் மேற்பட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

3. இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் அவர்களின் வரவேற்புரையினைத் தொடர்ந்து பேராசிரியர்கள் வேல்நம்பி மற்றும் மிகுந்தன் ஆகியோர் பயனாளிகள் என்ற முறையில் தமது அனுபவங்களை பகிர்ந்தனர். அதனைத் தொடர்ந்து ‘‘கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தினால் வழங்கப்படும் வாய்ப்புக்களை வடக்கு மாகாண மக்கள் முழுமையாக பயன்படுத்துகின்றார்களா இல்லையா என்ற தலைப்பில் யாழ்ப்பாண தமிழ் சங்கத்தின் திரு லலீசன் மற்றும் அவரது குழுவினரின் சிறப்புப் பட்டிமன்றமும் இடம் பெற்றது. இறுதியாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் அவர்களின் சிறப்புரை இடம் பெற்றது.

4. வரவேற்புரையில் இந்தியத் துணைத் தூதுவர் இந்தியப் பேராயத்தின் சிறப்பான பணிகளையும் அதன் மூலம் வட மாகாணம் பெற்றுக் கொள்கின்ற அனுகூலங்களையும் குறிப்பிட்டதுடன் இப் பேராயத்தினால் வழங்கப்படும் அனைத்து வசதிகள் மற்றும் சலுகைகளை வட மாகாண மக்கள் முழுமையாகப் பெற்று உச்ச அளவில் பயன்படத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

5. நிகழ்வுடன் தொடர்புடைய புகைப்படங்கள் காணொளிகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

***

09.ஏப்ரல் 2019

**Consulate General of India**
**Jaffna**
*******

**Press Release**

The Consulate General of India celebrated the ICCR Foundation Day 2019 at North Gate by Jetwing this evening (9th April, 2019).

Over 85 guests including the Hon'ble Governor of the Northern Province, NPC Chairman Mr. CVK Sivagnanam, senior government functionaries, University of Jaffna Vice Chancellor, former Opposition Leader, and beneficiaries of ICCR scholarships participated in the function.

Consul General Balachandran welcomed the guests. A debate on whether the people of the Northern Province utilize the ICCR's programmes fully or not was held under the leadership of Mr. Laleesan, President of Jaffna Tamil Sangam.

In his welcome speech, the Consul General appealed to the people of the Northern Province to take the fullest benefits from the ICCR schemes. Prof Velnamby and Prof Mikunthan shared their experiences as ICCR beneficiaries. NPC Chairman Sivagnanam congratulated the ICCR on its foundation day.

Representative photos/ videos are enclosed.

****

Jaffna
April 9, 2019